40	ஊரக வளர்ச்சித் துறை	3	...	...
41	பள்ளிக் கல்வித் துறை	2	...	...
43	சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை	60,31	...	...
45	தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை-இந்து சமய அறநிலையத் துறை	87,47	...	...
47	இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை	1	...	...
	பெருமொத்தம்	53,12,51	1,86,04	5,36,51

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (18-11-2004) காலை 10-00 மணிக்குக் கூடும். வணக்கம்.*

பின்னர், பேரவை முற்பகல் 11-52 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

1. 1988 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் விதிகளில் திருத்தம் செய்தது குறித்து கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் (சிஜெ1) துறையின் 4.6.2004 ஆம் நாளிட்ட 246 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1983ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 30/1983) 180 (5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).

2. 1974 ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வண்டிகள் வரி விதிப்புச் சட்டத்தின்கீழ் தமிழ்நாடு மாநிலச் சட்டப்பணிகள் குழுமத்தின் உறுப்பினர்-செயலாளர் அவர்களின் உபயோகத்திற்காக வாங்கப்படும் மோட்டார் வண்டிக்கு செலுத்தத்தக்க ஆயுட்கால வரியினையும் மற்றும் அரசு பதிவு எ.ண் ஒதுக்கீட்டிற்கான கட்டணத்தையும் விலக்களித்து உள் (போக்குவரத்து-1) துறையின் 6.5.2004 ஆம் நாளிட்ட 597 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1974 ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வாகனங்கள்

வரி விதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).

3. 1974 ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்புச் சட்டத்தின்கீழ் சேலம், சங்கரியில் வசிக்கும் திரு. பி. ஜாகீர் உசேன் என்பவருக்குச் சொந்தமான TN 28 Y 7985 ஆம் பதிவு எண் கொண்ட சரக்கு வண்டிக்காக 1.7.1992 முதல் 30.9.1994 வரையிலான காலத்திற்குரிய வசூலிக்க இயலாத மோட்டார் வண்டி வரி மற்றும் அபராதத்தை தள்ளுபடி செய்து உள் (போக்குவரத்து-1) துறை 25.6.2004 ஆம் நாளிட்ட 700 ஆம் எண் அரசாணையில் (1D) வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1974 ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வாகனங்கள் வரி விதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).

4. 1974 ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்பு சட்டத்தின் கீழ் திருப்பத்தூர் வட்டம், சிவகங்கையைச் சேர்ந்த காலஞ்சென்ற திரு.வி. மாணிக்கம் என்பவருக்குச் சொந்தமான TCA 2433 ஆம் எண்ணுள்ள சுற்றுலா மேக்சி கேப் வண்டிக்காக 1.1.1992 முதல் 7.10.1993 வரையிலான கால அளவிற்கு வசூலிக்க இயலாத மோட்டார் வண்டி வரி மற்றும் அபராதத் தொகையினை தள்ளுபடி செய்து உள் (போக்குவரத்து-1) துறையின் 24.6.2004 ஆம் நாளிட்ட 695 ஆம் எண் அரசாணையில் (1D) வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1974 ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வாகனங்கள் வரி விதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).

5. 1974 ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்பு சட்டத்தின்கீழ் சென்னை-34, கிண்டியில் உள்ள மத்திய அரசின் தொழிலாளர் நல அமைச்சகத்தின் தென் மண்டல தொழிற் பயிற்சி இயக்குநரின் பொறுப்பிலுள்ள பயன்படுத்தமுடியாத நிலையில் உள்ள MSM 9092 ஆம் எண் வண்டியின் மீது 1.4.1994 முதல் 31.3.2003 வரையிலான கால அளவிற்கான வரி நிலுவைத் தொகை மற்றும் தண்டத்தொகையினை, அவ்வாகனத்தை கழிவு செய்ய அத்துறை துரித நடவடிக்கையினை மேற்கொள்ள வேண்டும் என்கிற நிபந்தனைக்கு உட்பட்டு தள்ளுபடி செய்து உள் (போக்குவரத்து-1) துறையின் 15.6.2004 ஆம் நாளிட்ட 280 ஆம் எண் அரசாணையில் (2D) வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1974 ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார்

வாகனங்கள் வரி விதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).

6. 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார நுகர்வின் அல்லது விற்பனையின் மீதான வரிச்சட்டம் 12.6.2003 முதல் அமலுக்கு வருவதாக எரிசக்தித் (பி1) துறையின் 12.6.2003ஆம் நாளிட்ட 49 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார நுகர்வின் அல்லது விற்பனையின் மீதான வரிச்சட்டம் (தமிழ்நாடு சட்டம் 12/2003) 15 (4) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).

7. 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார நுகர்வின் அல்லது விற்பனை மீதான வரிச்சட்டத்தின் கீழ் உரிமம் பெற்றவர்களால் விற்பனை செய்யப்படும் மின்சாரத்தின்மீது விதிக்கப்படும் வரி வீதத்தின் அளவினை அறிவித்து எரிசக்தித் (பி1) துறையின் 13.6.2003 ஆம் நாளிட்ட 51 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார நுகர்வின் அல்லது விற்பனை மீதான வரிச்சட்டம் (தமிழ்நாடு சட்டம் 12/2003) 15 (4) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).

8. 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார நுகர்வின் அல்லது விற்பனை மீதான வரிச்சட்டத்தின்கீழ் தமிழ்நாடு மின்சார நுகர்வின் அல்லது விற்பனை மீதான வரிச்சட்ட விதிகளை இயற்றி எரிசக்தித் (பி1) துறையின் 13.6.2003 ஆம் நாளிட்ட 52 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார நுகர்வின் அல்லது விற்பனை மீதான வரிச்சட்டம் (தமிழ்நாடு சட்டம் 12/2003) 15 (4) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).

9. 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார நுகர்வின் அல்லது விற்பனை மீதான வரிச்சட்டத்தின்கீழ் அரசின் தலைமை மின் ஆய்வாளரை மின்சார வரிக்கான இயக்குநராக நியமித்து எரிசக்தித் (பி1) துறையின் 13.6.2003 ஆம் நாளிட்ட 53 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (2003-ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார நுகர்வின் அல்லது விற்பனை மீதான வரிச்சட்டம் (தமிழ்நாடு சட்டம் 12/2003) 15 (4) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).

10. 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார நுகர்வின் அல்லது விற்பனை மீதான வரிச்சட்டத்தின் கீழ் சில அலுவலர்களை மின்சார

வரியின் ஆய்வு அலுவலர்களாக நியமித்து எரிசக்தித் (பி1) துறையின் 13.6.2003 ஆம் நாளிட்ட 54 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (2003ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார நுகர்வின் அல்லது விற்பனை மீதான வரிச்சட்டம் (தமிழ்நாடு சட்டம் 12/2003) 15 (4) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).

11. 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார நுகர்வின் அல்லது விற்பனை மீதான வரிச்சட்டத்தின்கீழ் மின் ஆய்வாளர்களாக பதவி வகிக்கும் மின்சார வரியின் ஆய்வு அலுவலர்களை பதிவு செய்வதற்கான அலுவலர்களாக நியமித்து எரிசக்தித் (பி1) துறையின் 13.6.2003 ஆம் நாளிட்ட 55 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார நுகர்வின் அல்லது விற்பனை மீதான வரிச்சட்டம் (தமிழ்நாடு சட்டம் 12/2003) 15 (4) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).

12. 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார நுகர்வின் அல்லது விற்பனை மீதான வரிச்சட்டத்தின்கீழ் நபர் அல்லது நபர்களுக்கு விற்பனை செய்யப்படும் மின்சாரத்தின் மீதான மின்சார வரியினை வசூலிக்க தமிழ்நாடு அரசால் தமிழ்நாடு மின்சார வாரியத்துக்கு ஒப்பளிப்பு வழங்கி எரிசக்தித் (பி1) துறையின் 13.6.2003 ஆம் நாளிட்ட 56 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார நுகர்வின் அல்லது விற்பனை மீதான வரிச்சட்டம் (தமிழ்நாடு சட்டம் 12/2003) 15 (4) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).

13. 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார நுகர்வின் அல்லது விற்பனை மீதான வரிச்சட்டத்தின்கீழ் வீட்டு உபயோகத்திற்கென விற்கப்படும் மின்சாரத்தின் மீது விதிக்கப்படும் மின்சார வரியினை 17.9.2003 முதல் நுகர்வோர்களுக்கு விலக்கு அளித்து எரிசக்தித் (பி1) துறையின் 17.6.2003 ஆம் நாளிட்ட 77 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (2003ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார நுகர்வின் அல்லது விற்பனை மீதான வரிச்சட்டம் (தமிழ்நாடு சட்டம் 12/2003) 15 (4) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).

14. 1908 ஆம் ஆண்டு பத்திரப் பதிவுச் சட்டத்தின் கீழ் 1982 ஆம் ஆண்டு பத்திரங்கள் எழுதுவோருக்கான உரிம விதிகள் மற்றும் 1971 ஆம் ஆண்டு பத்திர நகல் எழுதுவோருக்கான உரிம விதிகள் ஆகியவற்றிற்கு திருத்தங்கள் செய்து வணிக வரிகள் துறையின்

2004 நவம்பர் 17]

7.6.2004 ஆம் நாளிட்ட 103 மற்றும் 104 ஆம் எண் அரசாணைகளில் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள். (1908 ஆம் ஆண்டு பத்திரப் பதிவுச் சட்டத்தின் (மத்திய சட்டம் 16/1908) 89-A பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).

15. 1996 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநகராட்சிகள் பணி விதிகளில் திருத்தங்கள் செய்தது குறித்து நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் 26.8.2004 ஆம் நாளிட்ட 304 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1971ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 15/1971) 432 (2) பிரிவு, 1981 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 25/1981) 431 (2) பிரிவு, 1994-ஆம் ஆண்டு திருச்சிராப்பள்ளி மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 27/ 1994) 11/(3) பிரிவு, 1994 ஆம் ஆண்டு திருநெல்வேலி மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 28/1994) 11 (3) பிரிவு மற்றும் 1994 ஆம் ஆண்டு சேலம் மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 29/1994) பிரிவு 11 (3) ஆகிய பிரிவுகளின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).

16. 1996 ஆம் ஆண்டு தமிழ்நாடு பேரூராட்சிகள் மற்றும் நகராட்சிகள் மற்றும் மாநகராட்சி மன்றங்கள் (தேர்தல்கள்) விதிகளில் சில திருத்தங்கள் செய்தது குறித்து நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் 14.7.2004 ஆம் நாளிட்ட 280 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/ 1920) 304 (2) பிரிவு, 1919-ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 4/1919) 348 (டி) பிரிவு, 1971 ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 15/1971) 432 (2) பிரிவு, 1981 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 25/1981) 431 (2) பிரிவு, 1994 ஆம் ஆண்டு திருச்சிராப்பள்ளி மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 27/1994) 11(3) பிரிவு, 1994-ஆம் ஆண்டு திருநெல்வேலி மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 28/1994) 11 (3) பிரிவு மற்றும் 1994 ஆம் ஆண்டு சேலம் மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 29/1994) பிரிவு 11 (3) ஆகிய பிரிவுகளின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).

17. 1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்திலுள்ள அட்டவணை மற்றும் 1988 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் விதிகளின் அட்டவணையிலும் சில திருத்தங்கள் செய்தது குறித்து கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் 29-6-2004 ஆம் நாளிட்ட 256 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 30/1983) பிரிவு 180 (5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

18. 21-1-2003 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 622-ல் வெளியிடப்பட்ட அறிக்கையில் விதிக்கப்பட்டுள்ள மோட்டார் வரியினை 1-12-2001 ஆம் நாளிலிருந்து திருத்தியமைத்தும், அபராதத் தொகையினை தள்ளுபடி செய்தும், 28-7-2004 ஆம் நாளிட்ட உள் (போக்குவரத்து-1) துறையின் அரசாணை 1டி எண் 836-ல் வெளியிடப்பட்ட திருத்த அறிவிக்கை. [1974 ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வாகனங்கள் வரி விதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

19. 2001 ஆம் ஆண்டு உள்ளாட்சிப் பரப்பிடங்களுக்குள் கொண்டு வரப்படும் சரக்குகள் மீதான வரிச் சட்டத்தின்கீழ் 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டம் அல்லது 1956 ஆம் ஆண்டு மத்திய விற்பனை வரிச் சட்டத்தின்கீழ் மறுவிற்பனை செய்யும் நோக்கத்திற்காக மேற்படி சட்டங்களின் விவர அட்டவணையில் குறிப்பிட்டுள்ள அட்டவணைச் சரக்குகளின் மீது செலுத்தத்தக்க வரியினை பொது நலன் கருதி கொச்சி எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்திற்கு விலக்களித்து வணிக வரித் துறையின் 8-9-2004 ஆம் நாளிட்ட 144 ஆம் அரசாணை (நிலை)யில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2001 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சிப் பரப்பிடங்களுக்குள் கொண்டு வரப்படும் சரக்குகள் மீதான வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 20/2001) 14 (4) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

20. 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுபான சில்லறை விற்பனை (அங்காடிகள் மற்றும் மது அருந்தகங்கள்) விதிகளில் திருத்தங்கள் செய்தது குறித்து மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை துறையின் 9-7-2004 ஆம் நாளிட்ட 267 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின்

(தமிழ்நாடு சட்டம் 10/1937) 54(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

21. 2002-2003 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு ஊரக வீட்டு வசதி மற்றும் உட்கட்டமைப்பு வசதி மேம்பாட்டுக் கழகத்தின் ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

22. 2003-2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் முப்பத்தி மூன்றாவது ஆண்டறிக்கை. [1956ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது) (தமிழ், ஆங்கிலம்)]

23. 2001-2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் இருபதாவது ஆண்டறிக்கை. [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (தமிழ், ஆங்கிலம்)]

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

1. 2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (மூன்றாம் திருத்த) அவசரச் சட்டம். (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 9/2004)

2. 2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு கள்ளச்சாராயக்காரர்கள், மருந்து சரக்குக் குற்றவாளிகள், வனக்குற்றவாளிகள், குண்டர்கள், விபசாரத் தொழில் குற்றவாளிகள், குடிசை நில ஆக்கிரமிப்பாளர்கள் ஆகியோரின் அபாயகரமான நடவடிக்கைகளைத் தடுத்தல் (திருத்த) அவசரச் சட்டம். (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண். 10/2004)

3. 2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு காணொலிப் பேழை பதிவுக் கருவிகள் மற்றும் கம்பி வடத் தொலைக்காட்சிப் பெட்டித்திரையில் படங்களைக் காட்டுதல் (முறைப்படுத்துதல்) அவசரச் சட்டம். (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 11/2004)

4. 2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (திருத்த) அவசரச் சட்டம். (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 12/2004)

5. 2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒப்பந்தப்புள்ளிகள் ஒளிவின்மை (திருத்த) அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 13/2004)